# அரசமைப்புச் (நூற்று ஐந்தாம் திருத்தம்) சட்டம், 2021

[2021, ஆகஸ்ட் 18]

இந்திய அரசமைப்பை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :–

1. (1) இந்தச் சட்டம், அரசமைப்புச் (நூற்று ஐந்தாம் திருத்தம்) சட்டம், 2021 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று செல்லாற்றல் பெறும்.

2. அரசமைப்பின் 338 (ஆ) ஆம் உறுப்பின், (9) ஆம் கூறில், பின்வரும் வரம்புரையானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 338 (ஆ) ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

"வரம்புரையாக: இந்தக் கூறில் உள்ள எதுவும் 342 (அ) ஆம் உறுப்பின் (3) ஆம் கூறின் நோக்கங்களுக்குப் பொருந்துதல் ஆகாது.".

3. அரசமைப்பின் 342 (அ) ஆம் உறுப்பின்,– 342 (அ) ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

(அ). (1) ஆம் கூறில், "இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்" என்ற சொற்களுக்கு "மைய அரசினைப் பொறுத்தவரை மைய வரிசைத்தொகுப்பிலுள்ள சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்" என்ற சொற்கள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ஆ). (2) ஆம் கூறுக்குப் பின்பு, பின்வருவன புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:—

'விளக்கம்.— (1) மற்றும் (2) ஆம் கூறுகளைப் பொறுத்தவரை, "மைய வரிசைத்தொகுப்பு" என்ற சொற்றொடர், மைய அரசிற்காக மற்றும் அதனால் தயாரிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டுவரும் சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் வரிசைத்தொகுப்பு என்று பொருள்படும்.

(3). (1) மற்றும் (2) ஆம் கூறுகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஒவ்வொரு மாநிலமும் ஒன்றியத்து ஆட்சிநிலவரையும், அதன் தனிப்பட்ட நோக்கங்களுக்காக, சட்டத்தினால், சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும்

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் வரிசைத்தொகுப்பினைத் தயாரித்துப் பராமரித்துவரலாம்; அவற்றிலுள்ள பதிவுகள் மைய வரிசைத் தொகுப்பிலிருந்து வேறுபடலாம்.'.

4. அரசமைப்பின் 366 ஆம் உறுப்பின், (26 (இ) ) ஆம் கூறுக்கு, பின்வரும் கூறு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :– 366 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

'(26 (இ) ) "சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்" என்பது மைய அரசு அல்லது மாநில அரசு அல்லது, நேர்வுக்கேற்ப, ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் நோக்கங்களுக்காக 342(அ) ஆம் உறுப்பின்படி அவ்வாறு கொள்ளப்படும் அத்தகைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று பொருள்படும்'.